படவில்லை. ஆகவே, மதிப்புமிக்க அந்தப் பிரபலமான பிற மொழியில் இருக்கின்ற நூல்களைச் சிறப்பான முறையில் தமிழில் வெளியிட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

Representation from St. Peter's High School Teachers Association

* Q. No. 368 Thiru R.UMANATH: will the Hon. the Minister for Education be pleased to state:

(a) Whether any representation has been received recently from the Teachers Association, St. Peter's High School, Thanjavur, alleging prevention of teachers by management of C.S.I. Schools from exercising their fundamental right to seek any remedy in a court of law; and

(b) if so, the action taken by the Goverment thereon ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே,

(அ) ஆசிரியர் சங்கத்திடமிருந்து எந்தவித முறையீடும் வரவில்லை. ஆனால், சில ஆசிரியர்கள் சில குறைபாடுகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

(ஆ) அந்த அடிப்படையிலே சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

சென்னை மாநகராட்சிப் பணிகளுக்குத் தேர்வு

* வினா எண். 369— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை மாநகராட்சித் துறையில் உள்ள பதவிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கத் தனியாக சர்வீஸ் கமிஷன் ஒன்றை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

1979 மார்ச் 13]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே சென்னை மாநகராட்சியிலே மட்டுமல்ல, மதுரை போன்ற மாநகராட்சிகளிலும், ஏனைய தமிழகத்திலே உள்ள அத்தனை நகராட்சிகளிலும் அதைப்போல் ஊராட்சிகளிலும் புதிதாகத் தேவைப்படும் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்க தமிழக அரசு தனியே நிறுவனம் ஒன்றை அமைத்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

ஆரூர் ஒன்றியத்திற்கு புதிய ஜீப் வண்டி.

*வினா எண்: 370—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குப் புதிய ஜீப் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தற்பொழுது உபயோகத்திலுள்ள ஜீப் பயனற்றதென்று ஒதுக்கிய பின் புதிய ஜீப் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, ஆருர் ஒன்றிய ஜீப்பை ரிப்பேர் செய்து ஓட்டிக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்கள். ஜீப்புகள் "அக்ரோ சர்வீஸ் டெப்போ" க்களில்தான் 'ரிப்பேர்' செய்யப்படுகிறது. அப்படி செய்யும்போது, சிறிய ரிப்பேருக்குக் கூட, தனியார் பட்டறைகளிலே வசூல் செய்யும் தொகையைவிட இருமடங்கு, மும்மடங்கு அதிகமாக இந்த டெப்போக்களில் வசூலிக்கப்படுகிறது என்ற புகார் அரசுக்கு வருகிறதா? சின்ன ரிப்பேருக்குக் கூட மாதக்கணக்கில் காலங் கடத்துவதை அரசு அறியுமா? அதற்குப் பரிகாரம் காண அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படிப் பட்ட தகவல் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய அந்தக் கருத்தினை யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருந்துறையை நகராட்சியாக்கல்.

*வினா எண்: 371—டாக்டர் ஏ. பொன்னுசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம் பேரூராட்சிகளை இணைத்து பெருந்துறையை நகராட்சி ஆக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : நகராட்சிகளின் ஆய்வாளரின் பரிசிலனையில் உள்ளது.